**பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டம் - 2022**

---------------------------------------------------------------------------------------------------

பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 செப்தெம்பர் 08 ஆம் திகதிய செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 55 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கையின் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் உள்ள செயற்திட்ட சமூகங்களை வலுவூட்டுவதற்காக பாதுகாப்பான, வினைத்திறனான மற்றும் காலநிலையைத் தாங்கக்கூடிய இணைப்பை வழங்குவதும், விவசாய விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துவதும் செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 101,499.6 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 500 மில்லியன் தொகையானதுடன் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. 2023 ஏப்ரல் 19 ஆம் திகதிய ஆர்ஈஎஸ்51645 ஆம் இலக்க மறுசீரமைப்பு பத்திரத்தின் பிரகாரம் கடன் தொகையானது தற்செயல் அவசரகால பதிலளிப்பு கூறுக்கான (CERC) ஐ.அ.டொலர் 325 மில்லியன் மீள்ஒதுக்கீடு காரணமாக ரூபா 54,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. ரூபா 300 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.83 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் 2021 நவம்பர் 03 இல் அதன் செயற்பாடுகளை ஆரம்பித்திருந்ததுடன் 2026 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா. (மில்லியன்) | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் செயற்திட்டத்தின் தற்செயல் அவசரகாலப் பதிலளிப்புக் கூறுக்கான ஐ.அ.டொலர் 325 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டின் செலவினம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், கடப்பாட்டு பிரிப்பிற்கான கணக்கீட்டு அடிப்படை மற்றும் செயற்திட்டத்தின் தற்செயல் அவசரகால பதிலளிப்புக் கூறு மற்றும் ஏனைய கூறுகளுக்கு இடையிலான வட்டி அறவீடுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 99,903.27 | சீஆர்சீ இற்காக நிறுவப்பட்ட ஒரு தனி நிறுவனத்தை கணக்கீடு செய்தல், சீஆர்சீ உடன் தொடர்புடைய செலவினம் தனியான நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் | நிதிக்கூற்றுக்களில் நிதியளிப்பு ஏற்பாடுகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கடன் உடன்படிக்கையின் 2.03 ஆம் பிரிவின் பிரகாரம் ஐ.அ.டொலர் 0.68 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணங்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் கடன் மீதி மற்றும் நடைமுறை வேலை என்பன அந்த தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 221.36 | கடனுடன் தொடர்புடைய கடப்பாட்டுக் கட்டணங்கள் கடன் உடன்படிக்கையின் ஒரு அங்கமாக செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கடன் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் வட்டி அறவீடுகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் வெளிநாட்டுக் கடன் மீதி மற்றும் நடைமுறை வேலை என்பன அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 254.06 | கடனுடன் தொடர்புடைய வட்டி அறவீடுகள் கடன் உடன்படிக்கையின் ஒரு அங்கமாக செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் சரியான தொகை காட்டப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 5 இன் 43(அ) பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு நிதி நிலைமை கூற்றுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றுத் திகதியின் இறுதி அந்நிய செலாவணி விகிதத்தில் குறிப்பிடப்பட வேண்டும். எனினும், மேற்படி தேவைப்பாட்டின் பிரகாரம் செயற்திட்டத்தின் வெளிநாட்டுக் கடனுடன் தொடர்புடைய நாணயமாற்று சமநிலை சீராக்கங்கள் மீளாய்வாண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 482.00 | கடன் நாணயம் சமர்ப்பிப்பு நாணயத்துடன் வேறுபடுகின்ற போது நாணமாற்று சமநிலை சீராக்கங்கள் தேவைப்படுகிறது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுதல். |

## 2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | கடன் உடன்படிக்கையின் 11 ஆம் அட்டவணையின் ஆ 2 மற்றும் 4 ஆம் பிரிவு | செயற்திட்டமானது கடன்பெறுதல்கள் அமுலுக்கு வரும் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பொருந்தும் மானிய கையேட்டிற்கு இணக்கமான செயற்திட்டச் செயற்பாட்டுக் கையேட்டைத் தயாரிக்க வேண்டும், எனினும், 2022 திசெம்பர் 31 வரையிலும் அந்தக் கையேட்டைத் தயாரிப்பதற்கு செயற்திட்டம் எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. | மீளாய்வு நிதியாண்டிற்குள் பொருந்தும் மானியக் கூறு இறுதி செய்யப்படவில்லை. | செயற்பாட்டு கையேட்டில் உள்ள நிபந்தனைகளை பின்பற்றுதல் வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தி. | மீளாய்வாண்டில் குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை செயற்திட்ட வழிநடாத்தல் குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | விடயங்களின் முன்னுரிமையை கருத்தில் கொண்டு செயற்திட்ட வழிநடாத்தல் குழு கூட்டம் நடாத்தப்படுகிறது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை பின்பற்றுதல் வேண்டும். |
| (இ) | 2016 யூன் 10 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | மீளாய்வாண்டில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | உள்ளக கணக்காய்வு பொறிமுறைக்கு பொருத்தமான ஏற்பாடு செய்யப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை பின்பற்றுதல் வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

(அ) பாதுகாப்பான மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துதல்

| கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க் கப்பட்ட பௌதீக செயலாற்ற ல் (%) | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் (%) | | |
| பாதுகாப்பான மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக் கூடிய போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துதல் | கிராமிய வீதியின் புனரமைப்பு, மேம்பாடு மற்றும் பராமரிப்பு | 24.94 | 11.83 | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் முக்கிய செயற்பாடுகளின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 21 சதவீத இலக்கிடப்பட்ட முன்னேற்றத்திற்கு எதிராக 11 சதவீதமாக இருந்தது. | ஒப்பந்ததாரர்களின் மோசமான செயலாற்றல் மற்றும் எரிபொருள் மற்றும் நிர்மாணப் பொருட்கள் பற்றாக்குறை. |

**முகாமைத்துவத்தின் பதில்** மெதுவான முன்னேற்றத்திற்கு முக்கியமாக நுண்-பொருளாதார காரணிகளின் பாதகமான நடத்தை காரணமாக உள்ளது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** கால எல்லைக்குள் செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

(i) கிராமிய வீதிகளை பேணுதல் - இரத்தினபுரி மாவட்டம்

| கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் (%) | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் (%) | | |
| பாதுகாப்பான மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துதல் | கிராமிய வீதியின் புனரமைப்பு, மேம்பாடு மற்றும் பராமரிப்பு | 64.42 | 20.21 | இரத்தினபுரி மாவட்டத்தில் 76.62 கிமீ மொத்த நீளமுள்ள 22 கிராமிய வீதிகள் புனரமைக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் செயற்திட்ட பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் | எரிபொருள் மற்றும் மூலப்பொருள் பற்றாக்குறை. |

| | | | |
|---|---|---|---|
| | | | நான்கு பொதிகளின் கீழ் 49 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான பௌதீக முன்னேற்றம் அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், மொத்த நீளமுள்ள வீதிகளின் 9 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 7.1 கிமீ நீளம் மாத்திரமே ரூபா 601.1 மில்லியன் கிரயத்தில் புனரமைக்கப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நான்கு பொதிகளின் பௌதீக முன்னேற்றத்தில் 14 சதவீதம் முதல் 26 சதவீதம் வரையானதை மாத்திரமே இது பிரதிநிதித்துவப்படுத்தியது. எனவே செயற்திட்டக் காலப்பகுதியினுள் வீதிகளின் புனரமைப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதில் ஏற்படும் அபாயத்தை கணக்காய்வின் போது நிராகரிக்க முடியாது. |

**முகாமைத்துவத்தின் பதில்** அந்தக் காலப்பகுதியில் நாட்டின் பொருளாதார ஸ்திரமின்மை காரணமாக நிர்மாணப் பணிகளுக்குப் போதுமான எரிபொருள் மற்றும் வெடிக்கும் பொருட்களைப் பெறுவது ஒப்பந்ததாரர்களுக்கு கடினமாக இருந்தது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** கால எல்லைக்குள் செயற்திட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

(ii) கிராமிய வீதிகளை பேணுதல் - மாத்தளை, அனுராதபுரம் மற்றும் குருணாகல் மாவட்டங்கள்

| **கூறு** | **செயற்பாடு** | **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | **தாமதம்/ கணக்காய்வு விடயம்** | **தாமதங்களிற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் (%)** | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் (%)** | | |
| பாதுகாப்பான மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக் கூடிய | கிராமிய வீதியின் புனரமைப்பு, மேம்பாடு மற்றும் பராமரிப்பு | 22.39 | 15.31 | செயற்திட்ட பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் மாத்தளை, அநுராதபுரம் மற்றும் குருநாகல் | நாட்டில் எரிபொருள் கட்டுப்பாடுகள் மற்றும் மூலப்பொருள் தட்டுப்பாடு |

| | | | |
|---|---|---|---|
| போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துதல் | | மாவட்டங்களில் உள்ள 63 கிராமிய வீதிகளின் 281.83 கிமீ மொத்த நீளம் செயற்திட்ட காலப்பகுதியின் போது புனரமைக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், 251.67 கிமீ நீளம் கொண்ட 54 கிராமிய வீதிகளின் புனரமைப்பு பணிகள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடங்கப்பட்டிருந்தன, மேலும் இது 1 சதவீதம் மூதல் 21 சதவீதம் வரையான குறைந்த பௌதீக முன்னேற்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. மேலும், மொத்த வீதி நீளத்தில் 1.7 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 4.5 கிமீ நீளம் மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | நிலவியது. |

**முகாமைத்துவத்தின் பதில்** நுண் பொருளாதார காரணிகளின் பாதகமான தாக்கம் முக்கியமாக இந்த ஒப்பந்தப் பொதிகளின் உண்மையான மற்றும் திட்டமிடப்பட்ட பௌதீக முன்னேற்றத்திற்கு இடையே பாதகமான வேறுபாட்டிற்கு பங்களித்துள்ளது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரத்தினபுரி மாவட்டத்தில் எம்பிலிப்பிட்டிய, பெல்மதுல்ல மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளில் உள்ள 76.62 கிலோமீற்றர் கிராமிய வீதிகளை புனரமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்கான ஆலோசனை சேவையானது ரூபா 164.84 மில்லியன் கிரயத்தில் ஆலோசனை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆலோசனை சேவையின் கிரய மதிப்பீடு ரூபா 80.5 மில்லியனாக இருந்ததுடன் இது பொறியியல் மதிப்பீட்டில் 104 சதவீதம் கிரயம் அதிகரித்ததை பிரதிநிதித்துவப்படுத்தியது. எனினும், பெறுகைக் குழு அந்த வேறுபாட்டை பகுப்பாய்வு செய்திருக்கவில்லை. இது கணக்காய்வின் போது பிச்சனைக்குரிய விடயமாக இருந்தது. | அமைச்சு ஆலோசனை பெறுகைக் குழு அதிக வேறுபாட்டை பகுப்பாய்வு செய்து, இரண்டு முறை பேச்சுவார்த்தை நடாத்தி, ஆரம்ப சமர்ப்பிப்பில் இருந்து 36 சதவீதத்தால் அதன் கிரய முன்மொழிவை குறைத்தது. | கிரய மதிப்பீட்டை பகுப்பாய்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆலோசனைச் சேவையைத் தெரிவுசெய்வதற்காக தகுதி அடிப்படையிலான பெறுகை முறையின் அதிகபட்ச வரம்பு ஐ.அ.டொலர் 0.3 மில்லியனாக இருந்த போதிலும் இந்த பெறுகையில் இந்த வரம்பு ஐ.அ.டொலர் 0.2 மில்லியனால் விஞ்சப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் குறித்த தெரிவுசெய்தல் முறையைப் பயன்படுத்துவதற்கான காரணம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வரம்பு எல்லை ஐ.அ.டொலர் 0.2 மில்லியனால் விஞ்சப்பட்டிருந்தது. எனினும், பேரம் பேசப்பட்ட கிரய முன்மொழிவு வங்கி மீளாய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் ஆட்சேபனை எதுவும் பெறப்படவில்லை. | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் உள்ள நிபந்தனைகளை பின்பற்றுதல் வேண்டும். |
| (இ) | அம்பாந்தோட்டை, மொனராகலை மற்றும் புத்தளம் மாவட்டங்களின் 200 கிலோமீற்றர் கிராமிய வீதிகளின் சுற்றாடல் மற்றும் சமூகத் திரையிடலுக்கான ஆலோசனைச் சேவைக்காக ரூபா 19.66 மில்லியன் கிரயத்தில் ஒரு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 3.5 மில்லியன் அல்லது பொறியியல் மதிப்பீட்டில் 21 சதவீதத்தால் விஞ்சப்பட்டிருந்தது. | நாட்டில் உள்ள அனைத்து சிரமங்களையும் கருத்தில் கொண்டு ஆலோசகர் தனது கிரய முன்மொழிவை முன்வைத்தார். | மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்கு சரியான மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் ரூபா 54,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,241.94 மில்லியனை மாத்திரமே செயற்திட்டம் பயன்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களின் மெதுவான முன்னேற்றம் முக்கியமாக கடன் நிதிகளின் மோசமான பயன்பாட்டிற்கு தாக்கம் செலுத்துகிறது. | ரூபா 2,712.12 மில்லியன் தொகை முற்திகதியிடப்பட்ட நிதியுதவியின் கீழ் மேலும் பயன்படுத்தப்பட்டதுடன் வழிகாட்டல்களின் பிரகாரம் வாக்குப்பணத்திற்கு வரவு வைக்கப்படவில்லை. | கடன் நிதி செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி இலக்குகளின் பிரகாரம் தற்செயல் அவசரகால பதிலளிப்புக் கூறிற்கு (சீஈஆர்சீ) பின்னர் திருத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, மீளாய்வாண்டு இறுதிக்கான இலக்குகள் பணவளிப்புடன் நிதிகளின் பயன்பாட்டை கணக்கிணக்கம் செய்ய முடியவில்லை. எனினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் வழங்கும் முகவராண்மைக்கு ரூபா 221.36 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணம் செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது. | மீளாய்வு நிதியாண்டில் கடன் கூறுகள் இறுதி செய்யப்படாததால் திருத்தப்பட்ட பணவளிப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய மாற்றங்களுக்கு ஏற்ப இலக்குகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வாக்குப்பண இல. 117-2-4-48-2506-0-17 இன் கீழ் ரூபா 70 மில்லியன் ஜீஓஎஸ்எல் ஒதுக்கீட்டில் ரூபா 47.83 மில்லியனை மாத்திரமே செயற்திட்டம் பயன்படுத்தியிருந்ததுடன் இது மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டில் 68.33 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. | கணக்காய்வு அவதானிப்பு உண்மையாகவே சரியானதாகும். | ஜீஓஎஸ்எல் ஒதுக்கீடுகளை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 புறம்பான கொடுப்பனவுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் அமலாக்கல் ஏற்பாடுகள் மற்றும் ஆதரவுத் திட்டத்தின் 22 ஆம் பிரிவு மற்றும் 33 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் 100,000 கிமீ கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக கடன் உடன்படிக்கை திகதியிலிருந்து 12 மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 75 மில்லியன் வரை ஏற்கனவே செய்யப்பட்ட தகுதியான செலவினங்களை மீள்நிரப்பு செய்வதற்கு உலக வங்கியின் பிரதிநிதிகள் இணங்கியிருந்தனர். எனினும் ரூபா 3,949.43 மில்லியனிற்கு சமமமான ஐ.அ.டொலர் 10.89 மில்லியன் மாத்திரமே உலக வங்கியின் தேவைப்பாடுகளுடன் இணங்க இயலாமையால் மீள்நிரப்பு செய்யப்பட்டிருந்தது. எனவே, முற்திகதியிடப்பட்ட நிதியுதவியின் கீழ் மொத்த ஒதுக்கீட்டில் 14.52 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | முன்நோக்கிய காலப்பகுதியினுள் 100,000 கிமீ நிகழ்ச்சித்திட்டத்தால் செலுத்தப்பட்ட செலவினங்கள் ஆய்வு செய்யப்பட்டு இந்தக் கூறின் கீழ் கோரப்பட்டுள்ளன. | குறித்துரைக்கப்பட்ட தோவைப்பாடுகளின் பிரகாரம் ஒதுக்கீடுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 3,949.43 மில்லியன் முற்திகதியிடப்பட்ட மீள்நிரப்புச் செய்தல் செயற்திட்ட நோக்கங்களுக்கு நேரடியாகப் பங்களிக்காமல் நடைமுறை வேலை செலவினங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. | நடைமுறை வேலையில் தொடர்புடைய செலவினங்களை செயற்திட்டம் அறிக்கையிட்டிருந்தது. | நடைமுறை வேலையின் கீழ் சரியான செயற்திட்டக் கிரயம் காட்டப்பட வேண்டும். |

### 3.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| **செயற்திட்டத்தின் கீழ் தற்செயல் அவசரகால பதிலளிப்புக் கூறை (சீஈஆர்சீ) செயற்படுத்துதல்**<br><br>திறைசேரிச் செயலாளரின் 2022 மே 09 ஆம் திகதிய கடிதம் மற்றும் 2022 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய உலக வங்கியின் நாட்டு பணிப்பாளரால் அனுப்பப்பட்ட கடிதம் ஆகியவற்றின் பிரகாரம் தற்செயல் அவசரகால பதிலளிப்பு கூறுக்காக ஐ.அ.டொலர் 325 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் குறைப்பதற்கும், உடனடித் | | |

| | | | |
|---|---|---|---|
| | தேவைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பை வழங்குவதன் மூலம் சமூக ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் சீஈஆர்சீ நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன | | |
| (அ) | செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட நோககெல்லையின் மாற்றங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தனியான மறுசீரமைப்பு பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஐ.அ.டொலர் 450 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் பாதுகாப்பான மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துதல் மற்றும் ஐ.அ.டொலர் 50 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் விவசாயிகளுக்கான விநியோகச் சங்கிலி மற்றும் சேவைக்கான அணுகலை மேம்படுத்துதல் ஆகிய 2 கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. செயற்திட்டத்தின் சீஈஆர்சீ கூறு செயற்படுத்தப்பட்ட பின்னர் செயற்திட்டத்தின் ஆரம்ப நோக்கெல்லை மாற்றப்பட வேண்டும். எனினும், 2023 ஏப்ரல் வரை ஆரம்ப நடவடிக்கைகளின் நோக்கெல்லை மாற்றம் சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டத்தின் நோக்கெல்லை யதார்த்தமான அடிப்படையின்றி மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | திறைசேரி செயலாளரின் கோரிக்கையின் அடிப்படையில் சீஈஆர்சீ செயற்படுத்தப்பட்டதுடன் செயற்திட்ட நோக்கெல்லை மாற்றப்பட்டிருந்தது. மறுசீரமைப்பு பத்திரங்கள் 2023/04/19 இல் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுது. | செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் முறையான சாத்தியவள ஆய்வு நடாத்தப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் சீஈஆர்சீ செயற்படுத்தப்பட்ட பின்னர் செயற்திட்டத்தின் கூறு 1 இற்காக கடனுக்கான ஆரம்ப ஒதுக்கீடு ஐ.அ.டொலர் 450 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 150 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் கூறு 2 இற்கான | கூறு 2 விரிவாக கலந்துரையாடப்பட்ட்டு மறுசீரமைப்பு பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. | செயற்திட்டக் கூறை இறுதி செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஒதுக்கீடு 2022 திசெம்பர் 31 வரையிலும் இறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) செயற்திட்டத்தின் நோக்கெல்லை வரம்பிற்குப் பின்னர் கடன் உடன்படிக்கை, செயற்திட்ட அபிவிருத்தி நோக்கங்கள், செயற்திட்ட பெறுபேறுக் கட்டமைப்பு, அமுல்ப்படுத்தல் ஏற்பாடுகள், பணவளிப்பு இலக்குகள் மற்றும் நிபந்தனைகள், சுற்றாடல் மற்றும் சமூக கட்டமைப்பு என்பன அதற்கேற்ப மாற்றப்பட வேண்டும். எனினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணம் அதற்கிணங்க திருத்தப்பட்டிருக்கவில்லை. இது எதிர்காலத்தில் சரியான முன்னேற்றத்தை மோசமாக பாதிக்கலாம். | நிதியளிப்பு முகவராண்மையின் ஒத்துழைப்புடன் செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் திருத்தம் மேற்கொள்ளப்படும். | மீளாய்வின் பிரகாரம் செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.6 மனித வள முகாமைத்தவம் தொடர்பான விடயங்கள்**

| **பதவி நிலை** | **பதவிகளின் எண்ணிக்கை** | | | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| | **அங்கீகரிக்கப்பட்டது** | **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | | |
| சிரேஷ்ட பொறியியலாளர் | 5 | 3 | 2 | செயற்திட்ட வாழ்க்கைச் சுழற்சிக்கு ஏற்ப செயற்திட்டம் போதுமான பதவியணியினரை பேணியிருந்தது. | செயற்திட்ட செயலாற்றலை அதிகரிப்பதற்கு உகந்த பதவியணியினர் பேணப்பட வேண்டும். |
| சிரேஷ்ட பெறுகை நிபுணர் | 1 | -- | 1 | | |
| பெறுகை பொறியியலாளர் | 2 | -- | 2 | | |
| சுற்றாடல் நிபுணர் | 1 | - | 1 | | |
| சமூக பாதுகாப்பு நிபுணர் | 1 | - | 1 | | |